நாள். 19.12.2022

M.C. No. 08/2022

மா.சா. 1

திருமதி. விஜயலட்சுமி

க/பெ. மாரியப்பன்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் உடற்கல்வி படிப்பு படித்துள்ளேன். நான் BBM பட்டப்படிப்பு முடித்துள்ளேன். நான் தற்போது அதக்கப்பாடியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் தற்காலிகமாக உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது எனக்கு அரசு வருமானம் ரூபாய். 10,000/- ஆகும். நான் தருமபுரி குற்றவியல் நீதிமன்றத்தில் MC No. 17/2012 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் ஜீவானம்சமாக மாதம் ரூபாய். 14,000/- கோரியிருந்தேன் என்றால் தற்போது எனக்கு நியாபகம் இல்லை.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் மா.சா.ஆ. 1 ஆனது எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டதா என்பது குறித்தும் நியாபகம் இல்லை. எனது பிரமாணப்பத்திரிக்கையில் ஜீவானம்ச வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. இருவரும் சேர்ந்து வாழ கோரி தாக்கல் செய்த மனுவில் உத்தரவி பிறப்பிக்கப்பட்டு என்றால் சரிதான்.

3. கேள்வி- எதிர்மனுதாரர் அரூர் நீதிமன்றத்தில் எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ கோரி எனக்கு எதிராக மனு தாக்கல் செய்தாரா

பதில்- ஆமாம்.

4. கேள்வி- அரூர் நீதிமன்றத்தில் விவகாரத்து கோரி மனு தாக்கல் செய்தாரா?

பதில் - ஆமாம். அதில் சேர்ந்து வாழ உத்தரவிடப்பட்டது.

5. கேள்வி - மேற்படி வழக்கானது அரூர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது நான் எதிர்மனுதாரருடன்சேர்ந்து வாழ வேண்டும் என்று தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால்?

பதில் - இல்லை நான் எனது சாட்சியத்தில் மேற்படி மனுக்கல் குறித்து முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிப்பதால் எனது சாட்சியமானது சட்டப்படி

ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

6. கேள்வி – நீதிமன்றம் உத்தவின் அடிப்படையில் நாங்கள் சேர்ந்து வாழ்ந்து 5, 6 நாட்களில் நான் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய் புகார் கொடுத்தேனா என்றால்?

பதில் – இல்லை. நடந்த சம்பவம் குறித்து தான் புகார் கொடுத்தேன்.

7. கேள்வி – எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 55/2013 என்ற வழக்கில் எதிர்மனுதாரரர் மற்றும் அவரது குடும்பத்தினர் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றால்?

பதில் – வழக்குதொடுக்கப்பட்டது உண்மை தான். ஆனால் விசாரணையின் முடிவு குறித்து எனக்கு தெரியாது.

8. கேள்வி – ம.சா.ஆ.4 ஆனது எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணம் என்றால்?

பதில் – மேற்படி ஆவணம் எனது தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

9. கேள்வி – குற்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர் எனக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து அதில் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளதா?

பதில் – விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நான் மேற்படி தீர்ப்பை எதிர்த்து சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

10 . கேள்வி – ம.சா.ஆ.9 விவாகரத்து தீர்ப்பு தொடர்பான ஆவணத்தை எனது தரப்பில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

பதில் – தெரியாது.

11. கேள்வி – என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.9 ஆனது என்னால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்?

பதில் – ஆமாம்.

12 . கேள்வி – ம.சா.ஆ.9 ல் மூன்று தெரிந்து நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

பதில் – அதிலுள்ள எழுத்து எனக்கு சரியாக தெரியாததால் கூற இயலாது.

13. ம.சா.ஆ.9 ஆனது வழங்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் தவறாகும்.

உண்மையிலேயே உறவினர் யாராவது என்னை தாக்கியிருந்தால் அவர்களது பெயரானது குறிப்பாக கூறியிருப்பேன் என்றும் நான் கூறுவதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால் குறிப்பாக பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

14. C.C.N.o. 55/2013 ல் உள்ள காரணங்களை நான் இம்மனுவில் திரும்ப கூறியதால் எனது மனுவானது சட்டப்படி ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கில் எனது குடும்பத்தினர் மற்றும் மூன்றாம் நபர் சாட்சியாவர். விவாகரத்து வழக்கில் நான் எதிர்மனுதாரரை கொடுமை செய்ததாக கூறியிருந்தால் தவறாகும். எனது குடும்ப அட்டையில் உள்ள முகவரியானது எனது பெற்றோரின் முகவரி என்றால் சரிதான். அது தருமபுரியின் மையப்பகுதியில் உள்ளது என்றால் தவறாகும்.

15. மேற்படி வீடானது 8000 சதுரடி உள்ளது என்றால் தவறாகும். அந்த வீட்டில் 3 வீடுகளானது வாடகைக்கு விடப்பட்டு வாடகை பெறப்படுகிறது என்றால் தவறாகும். எனது தந்தை 2015 ம் வருடத்தில் இறந்துவிட்டார். மேற்படி வீட்டில் எனக்கு வாரிசுரிமை அடிப்படையில் உரிமை உண்டா என்றால் இல்லை. எனது சித்தாப்பாவின் பெயர் சந்திரன் என்றால் சரிதான். பூர்வீக சொத்தில் பாகம் கேட்டு எனது சித்தாவிற்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் எனது சித்தப்பா என்னை தாக்கியதால் நான் புகார் கொடுத்தேன். சொத்திற்காக புகார் கொடுக்கவில்லை.

16 சித்தப்பா பூர்வீக நிலம் உள்ள ராஜாப்பேட்டையில் வசித்து வருகிறார் என்றால் தவறாகும். நான் 2 கடைகளை வாடகைக்கு விட்டு வாடகை வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் தவறாகும். குடும்ப அட்டையில் என்னுடைய பெயர், மற்றும் குழந்தைகள் பெயர் உள்ளது. நான் கூறுவது போல் குடும்ப அட்டையில் ஒரு குழந்தையின் பெயர் இல்லை எ ன்றும் வழக்கிற்காக 2 பேரின் பெயரும் உள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டையில் ஒரு குழந்தையின் பெயர் இல்லை என்றும், அவ்வாறு இல்லாத பெயரை இருப்பதாக கூறுவதால் நீதிமன்ற அவமதித்துவிட்டேன் என்றால் தவறாகும்.

17. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.14 மற்றும் 15 ல் கண்டுள்ள பள்ளிக்கட்டணங்களை எதிர்மனுதாரர் தான் செலுத்தினார் என்றும், நான் பள்ளியில் ஆசிரியராக பணபுரிவதால் கட்டணங்கள் குறித்த ஆவணங்களை வழக்கிற்காக தயார்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் அனைத்து கல்விக்கட்டணத்தையும் செலுத்தினேன். எனது குழந்தைகளை எனது கணவர் ஒவ்வொரு ஆண்டும் கல்விக்கட்டணம் செலுத்தி பராமரித்து வருகிறார் என்றால் தவறாகும்.மேற்படி விவரங்களை மறைத்து ஜீவனாம்ச மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறாகும்.

18. எனது பிரமாணப்பத்திரிக்கையில் 88 மாதம் ஜீவனாம்ச நிலுவைத்தொகை தர வேண்டும் என்று கூறியுள்ளேன் என்றும், ஏற்கனவே ஜீவனாம்ச மனு தாக்கல் செய்து அதில் உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் நான் சம்பாதித்து எதிர்மனுதாரருக்கு கொடுத்த தொகையை தான் ஜீவனாம்ச நிலுவைத்தொகையாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி தொகையை நான் எதிர்மனுதாரரிடம் கொடுத்ததாக ஆவணம் எதுவும் தா க்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

19. மேலும், ரூ.5280000/– நிலுவையில் உள்ளதாக எனது பிரமாணப்பத்திரிக்கை யில் கூறியுள்ளேன் என்றால் இல்லை. எனது தகப்பனார் எனக்கு இடம் வாங்கி கொடுத்து தொடர்பாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் எனக்கு இடம் எதுவும் வாங்கிக்கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக இடம் வாங்கி கொடுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. எனது மனுவில் எதிர்மனுதாரருடன் ஒரு வருடம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2006 முதல் 2009 ம் வருடம் வரை எதிர்மனுதாரருடன் மோட்டாங்குறிஞ்சி என்ற இடத்தில் தான் இருந்தேன். 2008 ம் வருடத்தில் எதிர்மனுதாரர் அவருடன் என்னை சேர்ந்து வாழக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் வழக்கிற்காக 2009 ம் வருடம் வரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது தந்தை மத்திய அரசாங்க வேலையில் இருக்கும்போது இறந்த காரணத்தினால் அவருக்கு வாரி சு அடிப்படையில் அரசாங்க வேலை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் .

21. வாரிசு அடிப்படையில் அவர் தற்போது மத்திய அரசு வேலையில் இருப்பதால் அவர் தன்னை சார்ந்த சகோதர, சகோதரிகள் மற்றும் தாயாரை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றால் எனது மாமியார் பென்சன் வாங்கி வருகிறார் மற்றும் எனது கணவருடன் உடன் பிறந்த சகோதர , சகோதரிகள் அனைவருக்கும்

திருமணமாகிவிட்டது. எனது நாத்தனார் ஒருவர் பென்சன் வாங்கிவருகிறார். பெண்கள் திருமணம் ஆனாலும் அவரது சகோதரர்கள் குல வழக்கப்படி பெண்களுக்கு வேண்டிய சீர்வரிசைகளை செய்ய கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. மேலும், எனது கணவருடன் பிறந்த அனைவருக்கும் செய்யவேண்டிய கடமைகளை செய்வதாக எனது கணவர் உறுதியளித்த காரணத்தினால் தான் அவர்கள் தங்களது தகப்பனாரின் வேலையை எனது கணவருக்கு விட்டுக்கொடுத்தனர் என்றால் தவறாகும் .எனது பெரிய மகள் 11 ம் வகுப்பு படிக்கிறாள்.எனது சின்ன மகள் 7 ம் வகுப்பு படிக்கிறார்.

22. எனது பெரிய மகள் டைப்பிங்கில் Junior, Senior முடித்துள்ளார் என்றால் சரிதான். அதற்கான செலவுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் தவறாகும். எதிர்மனுதாரர் வாரவாரம் குழந்தைகளை பார்த்து அவர்களுக்கு வேண்டிய அனைத்து செலவுகளையும் அவர் தான் கவனித்து வருகிறார் என்றால் தவறாகும். எனது வீட்டின் கணினி இல்லை. எனது மகள் படிப்பிற்காக எனது கணவர் கொரான காலத்தில் லேப்டாப் வாங்கி கொடுத்தார் என்றும் , தற்போது வழக்கிற்காக லேப்டாப் இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது மகள் பெயரானது எனது கணவரின் ரேசன் கார்டில் உள்ளது என்றும், எனது குடும்ப அட்டையில் அதனால் தான் 2 வது மகள் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

23. மேலும், எதிர்மனுதாரர் வேறு நபருடன் சேர்ந்து வாழ்வதாக நீதிமன்றத்தில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நல்ல ஆரோக்கியத்துடன் வேலைக்கு சென்று போதிய வருமானம் ஈட்டி வருகிறேன்என்றும், அதனால் நான் கோருவது போல் எனக்கு ஜீவனாம்சமானது கிடைக்கத்தக்கதல்ல என்றால் தவறாகும். எதிர்மனுதாரர் தற்போது வரை குழந்தைகளுக்கான முழு செலவையும் செய்து வருகிறார் என்றும், இனிமேலும், குழந்தைகளுக்கான செலவுகளை செய்வதாக உறுதியளிக்கிறார் என்றால் தற்போது வரை அவர் செலவு செய்யவில்லை. இனிமேல் செய்தால் எனக்கு சந்தோஷம்.

24. நான் தனியார் மற்றும் அரசு பள்ளியில் பணியாற்றி வருகிறேன் என்றும், வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேன் என்றும், வாடகை வருமானம் பெற்றுவ ருகிறேன் என்றும், ஆகவே நானும் குழந்தைகளை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றால் இதுபோல் வருமானம் இல்லை இருப்பினும் நான் தான் குழந்தைகளை

பராமரித்து வருகிறேன். எதிர்மனுதாரர் மாதம் ரூ.160000/- வருமானம் ஈட்டி வருவதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றும், அவரது சம்பளப்பட்டியல் படி அவருக்கு மாதம் ரூ. 53600/- தான் வருமானம் வருகிறது என்றால் தவறாகும்.

25. எனக்கே போதிய வருமானம் வருவதால் எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் தவறாகும். நான் உண்மையை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளதால் எனது மனுவானது சட்டப்படி ஏற்க்கத்தக்கதல்ல என்றால் தவறாகும். மேலும், இணைப்பு எண்.1 மற்றும் 2ல் நான் தவறான சங்கதிகளை கூறியதால் எனது மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.